செய்தி வெளியீடு எண்.436 நாள்.**11.6.2008**

# இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழக அரசு ஊழியர்களின் நலனுக்காகப் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

## முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கத்தின் வெள்ளி விழா 15.7.2007 அன்று நடைபெற்றபொழுது தமிழ்நாடு அரசு அலுவர்களின் நலனுக்காக, ஒவ்வொரு நான்கு ஆண்டு காலத்திற்கும் ரூபாய் இரண்டு இலட்சம் வரை மருத்துவச் சிகிச்சைக்காக நிதியுதவி வழங்க வகைசெய்யும் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஒன்று அரசு அலுவலர்கள் மற்றும் அரசின் பங்களிப்புடன் காப்பீட்டுக் கழகங்களுடன் இணைந்து தமிழக அரசால் செயல்படுத்தப்படும் என முதலமைச்சர் கலைஞர் அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, அரசு அலுவலர்கள் மட்டுமின்றி அரசுப் பொதுத் துறை நிறுவனங்கள், சட்டப்படியான வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் பணிபுரிவோரும் பயனடையும் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உரிய அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

அரசுப் பணியாளரின் கணவர் அல்லது மனைவி; மகன், மகள் எனில் அவர்கள் வேலையில் சேரும் வரையில், அல்லது திருமணம் ஆகும் வரையில் அல்லது 25 வயது நிறைவடையும் வரையில்; திருமணமாகாத அரசுப் பணியாளர் எனில் அவர்களுக்குத் திருமணமாகும்வரை அவர்களுடைய பெற்றோர் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதி படைத்தவர்கள் ஆவர்.

இத்திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரும் பணியாளர்கள் சிகிச்சை பெறும் போது, அவர்களுக்கு மருந்து செலவினங்கள்; லெப்ராஸ்கோபிக் அல்லது திறந்த அறுவை சிகிச்சைச் செலவினங்கள்; மருத்துவர்கள் மற்றும் உதவியாளர் தொடர்பான கட்டணங்கள்; தங்கும் அறை கட்டணம்; பரிசோதனைகள் மற்றும் உணவுக் கட்டணம் ஆகியவற்றைப் பெறுவர்.

புதிய இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்புக் காலஅளவிற்கு இரண்டு இலட்சம் ரூபாய்வரை அரசுப் பணியாளர் தனக்கு மட்டுமோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் சேர்த்தோ பணச் செலவின்றிச் சிகிச்சைகள் பெறலாம்.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு அரசுப் பணியாளருக்கும் மாதம் 25 ரூபாய் வீதம் ஆண்டுக்கு 300 ரூபாய் என அவரது 2008 ஜூன் மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஒரு பணியாளருக்கு ஆண்டுக் காப்பீட்டுத் தொகையாக 495 ரூபாயும்; 12.5 சதவீதம் சேவை வரியும் காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டும்; இத்தொகையில் அரசுப் பணியாளர்

**தனது பங்காக மாதம் 25 ரூபாய் வீதம் 12 மாதங்களுக்கு செலுத்தும் 300 ரூபாய் போக, மீதத் தொகையாகிய 195 ரூபாயுடன், 12.5 சதவீத சேவை வரி முழுவதையும் தமிழக அரசே அரசுப் பணியாளர்களுக்காகக் காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கும்.**

**இத்திட்டத்தின்மூலம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள ஏறத்தாழ 300 மருத்துவமனைகளில் 52 வகையான நோய்களுக்குச் சிகிச்சைகளும், அறுவை சிகிச்சைகளும் செய்து கொள்ள முடியும்.**

**இத்திட்டம் தொடர்பாக அரசுப் பணியாளர்களுக்கு ஏதேனும் குறைபாடுகளோ சிரமங்களோ நேர்ந்தால் அவற்றைக் களைந்திட உதவுதற்காக மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் அமைக்கப்பட்டுள்ள குழுக்களுடன் உயர்நிலைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன.**

**இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக விதிமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டுச் சென்னையைச் சேர்ந்த "ஸ்டார் ஹெல்த் அண்டு அலைடு இன்சூரன்ஸ் நிறுவனம்" தேர்வு செய்யப்பட்டுள்ளது.**

**இப்புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அனைத்து வகையிலும் சிறந்த முறையில் பயனளிக்கக் கூடியதாக இருப்பதைக் கருத்தில் கொண்டு இதுவரை ஏறத்தாழ 8 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு நிறுவனங்கள், மற்றும் வாரியங்களில் பணிபுரிவோர் இத்திட்டத்தில் பங்கேற்க விருப்பம் தெரிவித்துத் தேவையான விவரங்களையும், புகைப்படங்களையும் அளித்துள்ளனர்.**

**இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் செயல்படுத்தப் படவுள்ளதும், அரசுப் பணியாளர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளதுமான இத்திட்டத்திற்கான அடையாள அட்டைகளை தலைமைச் செயலகத்தில் 10 அரசுப் பணியாளர்களுக்கு வழங்கி முதலமைச்சர் கலைஞர் இத்திட்டத்தை இன்று (11.6.2008) தொடங்கி வைத்தார்.**

**இந்நிகழ்வின்போது, நிதித் துறை அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன், தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித் துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., கருவூலக் கணக்குத் துறை இயக்குநர் திரு. எம். முத்தையா கலைவாணன், இ.ஆ.ப. மற்றும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திருவாளர்கள் ஸ்டார் மருத்துவக் காப்பீட்டு நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ஜெகநாதன், ஐ.சி.ஐ.சி.ஐ.லம்பார்டு காப்பீட்டு நிறுவனத்தின் பிரதிநிதி, இத்திட்டத்தின் இணைக் காப்பீட்டு நிறுவனங்களாகப்** (Co-insurers) **பங்கேற்கும் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம், ஓரியன்டல் காப்பீட்டு நிறுவனம், நேஷனல் காப்பீட்டு நிறுவனம், நியூ இந்தியா காப்பீட்டு நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.**

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை**–9.**